

November 2025

# PREMA ANANDA VAHINI

# பிரேம ஆனந்த வாகினி

நவம்பர் 2025

## பொருளடக்கம்


1. சுவாமிஜியின் சத்சங்கம் ~ இறைவனை நினைத்து சும்மா இருங்கள்

8. உலகெங்குமுள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனச் செய்திகள்

16. இளைஞர் சங்கச் செய்திகள்


*"இறைவனே மிகவுயர்ந்த சக்தி, இதை நான் நம்புகிறேன். உங்களுக்குள் இருக்கும் அந்த இறைவனை நீங்கள் உணர வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்."*

*~சுவாமிஜி*

# சுவாமிஜியின் சத்சங்கம்

*(1993ம் ஆண்டு நவம்பர் 17ம் தேதி, சுவாமிஜியின் 42வது பிறந்த தினத்தன்று வழங்கிய சத்சங்கம்)*

# இறைவனை நினைத்து சும்மா இருங்கள்

ஆன்மிகத்தைப் பற்றி நாம் நினைத்துக் கொண்டிருக்கும் பொதுவான கருத்துக்களிலிருந்து எவ்வாறு மாறுப்பட்டிருக்கிறது என்று நான் உங்களுக்கு விளக்குகிறேன்.



வாழ்க்கையின் மதிப்பை யாருமே புரிந்து கொள்ளவில்லை. எனக்கு ஒரு சிறிய கேள்வி இருக்கிறது – நாம் ஏன் இந்த உலகில் பிறந்தோம்? பெரும்பாலும் பலருக்கு தாம் ஏன் பிறந்தோம் என்றோ அல்லது தாங்கள் வாழ்வதன் காரணம் என்னவென்றோ தெரிவதில்லை. எல்லோருக்கும் திருமணம் செய்துக் கொள்ளவும் நல்ல குடும்பத்தை அமைத்துக் கொள்ளவும், வேலை செய்து பணம் சம்பாதிக்கவுமே விரும்புகிறார்கள். இதைத்தான் பெரும்பாலனவர்கள் செய்வதை நான் பார்க்கிறேன். இதில் எந்தத் தவறும் இல்லை, ஆனால் இவ்வாறு வாழ்வது நம் வாழ்க்கையின் ஆழமான அர்த்தத்தை புரிந்து கொள்ள எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. ஆகவே, உலகத்திற்கு நான் எதைச் சொல்வதற்கும் விளக்குவதற்கும் விரும்புகிறேன்?

எல்லோருக்கும் ஏதோ ஒரு விதமான பிரச்சினை இருக்கிறது, அது குடும்பப் பிரச்சினைகள், உறவினர்களுக்கிடையேயான சச்சரவுகள் மற்றும் தவறான புரிதல்கள், வேலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், நோய்கள் என ஒவ்வொருவருக்கும் ஏதேனும் சில பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. உங்கள் பிரச்சினைகளை நான் புரிந்து கொள்கிறேன். ஆனால், இவை அற்பமான பிரச்சினைகள் இவற்றை 'அற்பமான பிரச்சினைகள்' என்று சொல்வது எனக்கு எளிது. ஆனால் நீங்கள் அவற்றை உங்கள் மனதை மிகவும் வருத்தும்படி விட்டு விடுகிறீர்கள். அதனால் அவை ஆன்மிக வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்குத் தடைகளாகி விடுகின்றன. இந்தத் தடைகள் ஏன்? எல்லோரும் மகிழ்ச்சியான வாழ்க்கையை விரும்புகிறார்கள்; யாரும் சோகமாக இருக்க விரும்புவதில்லை.

அப்படியென்றால் இந்த உலகில் நீங்கள் எப்படி மகிழ்ச்சியாக வாழப் போகிறீர்கள்? நான் கோபப்படுவதை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? இல்லை – நான் ஒரு நாளைக்கு 24 மணி நேரமும் சிரித்துக் கொண்டே வாழ்கிறேன்! இதற்குக் காரணம், என் இதயத்தில் நான் ஏதோ ஒன்றை உணர்கிறேன்;

என்னைப் பற்றி நான் ஏதோவொன்றை உணர்ந்திருக்கிறேன் — அதுதான் என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறது. அதே மகிழ்ச்சியை நீங்களும் எப்படி அனுபவிக்கலாம் என்பதை உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன்.

நீங்கள் குடும்ப வாழ்க்கை வாழ்வதையோ அல்லது பணம் சம்பாதிப்பதையோ நான் ஆட்சேபிக்கவில்லை. உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் எனது அறிவுரை. நீங்கள் இங்கே வந்து சந்நியாசியாகி தியானம் செய்ய வேண்டும் என்றெல்லாம் நான் சொல்லவில்லை. நான் யாரிடமும் அப்படிச் சொல்வதில்லை. ஆனால், உங்கள் இதயத்தில் உண்மையை உணரும் நிலைக்கு நீங்கள் வர வேண்டும்.

வெளிநாடுகளில் மக்கள் வசதியான வாழ்க்கை முறையை அனுபவிக்கிறார்கள். அதனால் அவர்கள் இந்தியாவுக்கும் ஸ்ரீ பிரேமானந்தா ஆசிரமத்திற்கும் வரும் போது, இங்குள்ள நிலைமையைச் சமாளிப்பது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. மிகப் பெரிய தொந்தரவு கொசுக்கள்தான் — அவை இரவில் உங்களைத் தூங்க விடாது. நேற்று இரவு 12 மணிக்கு பட்டாசு வெடிக்கும் சத்தமும் கேட்டது — படார்! இது ஏன் என்று நான் (ஆசிரமத்தின் மூத்த சிறுவர்களில் ஒருவரிடம்) கேட்டேன். அதற்கு அவன், இங்குள்ளவர்கள் கிறிஸ்துமஸ் கொண்டாடுவது போல் உங்கள் பிறந்தநாளைக் கொண்டாட விரும்புகிறார்கள் என்று கூறினான். நான் அவனிடம், "இயேசு நள்ளிரவில் பிறந்தார். ஆனால், நான் காலை ஏழு மணிக்குப் பிறந்தேன். பிறகு ஏன் இரவில் இவ்வளவு சத்தம் போடுகிறீர்கள்!" என்று கூறினேன். சரி, பரவாயில்லை, எது குழந்தைகளை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறதோ அதுவே இருக்கட்டும்; நான் அவர்களின் மகிழ்ச்சியைக் கெடுக்க விரும்பவில்லை. விஷயம் என்னவென்றால், எல்லா இடங்களிலும் தொந்தரவுகள் இருக்கும் என்பதை நீங்கள் உணர வேண்டும் — கொசுக்கள், சத்தம் எப்போதும் ஏதேனும் ஒன்று இருந்து கொண்டே இருக்கும். இந்தத் தொந்தரவுகள் மீது உங்கள் கவனத்தைச் செலுத்தாதீர்கள். அதற்குப் பதிலாக, 24 மணி நேரத்தில் எத்தனை மணி நேரம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்.

இங்கு இருப்பதன் மூலம் நீங்கள் மிகுந்த அமைதியை அனுபவிப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன் — இருப்பினும் நீங்கள் அமைதியின் மதிப்பை உணர்வதில்லை. சிலரிடம் செல்வம் இருக்கிறது. ஆனால் அவர்கள் தங்கள் செல்வத்தின் மதிப்பை உணர்வதில்லை. மற்றவர்களிடம் அறிவு இருக்கிறது. ஆனால் அதன் மதிப்பை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. சிலரிடம் ஏராளமான பழங்கள் இருக்கின்றன. ஆனால், அவை வீணாவதற்கு முன்பு அவற்றைச் சாப்பிடுவதில்லை. அவற்றின் மதிப்பை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அதேபோல், மனிதப் பிறவி கிடைத்திருந்தும் அத்தகைய வாழ்வின் மகத்தான மதிப்பை மக்கள் புரிந்து கொள்வதில்லை. எல்லாவற்றிற்கும் எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும் — அதுவே மிக உயர்ந்த நிலை.

உங்களுக்குள் தன்னம்பிக்கை, நம்பிக்கை மற்றும் பக்தி இருப்பது அத்தியாவசியம். மேலும், நீங்கள் தவறான திசையில் செல்வதாக உணர்ந்தால், உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டால், உங்கள் குருவிடம் சென்று ஆலோசனை கேளுங்கள். அவர் எது சரி என்பதை உங்களுக்குச் சொல்வார். அவர் உங்களுக்கு உதவுவார். மேலும் சரியான திசையில் உங்களை வழிநடத்த குருதேவர் ஏதாவது கூறும்போது, அவருக்குச் செவிசாயுங்கள் — இது மிகவும் முக்கியமானது. அவருடைய ஆலோசனையைக் கேட்கவில்லை என்றால், உங்கள் அகங்காரம் குறுக்கிட்டு, நீங்கள் கேட்பதைத் தடுக்கிறது என்று அர்த்தம்.

ஆசிரியர் தனது மாணவர்கள் உயர்நிலையை அடைய வேண்டும் என்று விரும்புகிறார்; அவர் ஒருபோதும் மாணவர்கள் மீது பொறாமைப்படுவதில்லை. நல்ல மாணவர்களை உருவாக்குவது ஆசிரியரின் கடமை. ஆனால் ஒரு மாணவர் மறுத்தால், ஆசிரியர் தனது நேரத்தையும் ஆற்றலையும்

வீணடிக்கிறார். ஒரு மாணவர் கடவுளின் பெயரைப் பயன்படுத்தி தவறான வழியில் சென்றால், அது ஆசிரியரின் நேரத்தை வீணடிப்பதாகும்.

எனக்குக் கடவுள் மீது முழு நம்பிக்கை உண்டு. நீங்கள் கடவுளை இயேசு கிறிஸ்து என்றோ, முகமது என்றோ அல்லது கிருஷ்ணர் என்றோ அழைத்தாலும் எனக்குக் கவலையில்லை. நான் எல்லா மதங்களையும் நம்புகிறேன். நான் அவற்றில் எதையும் ஒருபோதும் விமர்சிக்க மாட்டேன் – எல்லா மதங்களும் ஒன்றுதான். எனவே, என் நம்பிக்கை கடவுள் மீது உள்ளது. கடவுளே மிக உயர்ந்த சக்தி. நான் அதை நம்புகிறேன். மேலும் கடவுள் உங்களுக்குள்ளேயே இருக்கிறார் என்பதை நீங்கள் உணர வேண்டும் என்பதே நான் விரும்புவது.

அந்தத் தெய்வீகத்தையும் தெய்வீக வாழ்க்கை முறையையும் உங்கள் இதயத்தில் நீங்கள் அனுபவித்து உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் மிக உயர்ந்த உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும், உலக மாயை, எதிர்மறை எண்ணங்கள் போன்ற தவறான திசையில் சென்ற விடக் கூடாது என்றும் நான் விரும்புகிறேன். எனது உபதேசங்களும் வழிகாட்டுதலும் உங்களை ஒருபோதும் எதிர்மறை வழியிலோ அல்லது ஆன்மிகத்தில் தவறான பாதையிலோ செல்லும்படி வழிநடத்தாது. ஏனென்றால், நான் உங்களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். இது எனது கடமை.

"எப்போதும் ஒரு வினைக்கு எதிர் வினையிருக்கும். அந்த எதிர்வினையை நீங்கள் அடையாளம் கண்டு புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஒரு பொருத்தமான சூழலில் வாழ்வது அவசியம்."

மிக உயர்ந்த ஞானம் மற்றும் மிக உயர்ந்த தெய்வீக ஆற்றலின் உண்மையை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். நீங்களும் அதை புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் தவறான திசையில் சென்றால், நான் உங்களுக்கு அதைச் சொல்லாமல் இருந்தால், அது எனக்கும் கெட்ட பெயரைக் கொண்டு வரும். ஆன்மிகத்தில் நீங்கள் சரியான பாதையைப் பின்பற்றுவதற்காக, விஷயங்களை உங்களுக்கு விளக்குவது எனது கடமையாகும். (…)

நீங்கள் உண்மையுடன் வாழவில்லை என்றால், இந்த உன்னதமான தெய்வீகத்தை எப்படி உணர்ந்து கொள்ள முடியும்? நீங்கள் பொய் சொல்லி, உண்மையற்றவராக இருக்கும்போது, மாயையில் அதாவது பிரமையில் முழுமையாக மூழ்கிய ஒரு வாழ்க்கையை வாழ்கிறீர்கள். அப்படியிருக்க, உங்கள் உள் இதயத்தை எப்படிப் புரிந்து கொள்ள முடியும். உங்கள் இதயத்தை எப்படித் திறக்க முடியும்?

ஏனென்றால், முதலில் நீங்கள் உங்கள் இதயத்தைத் திறக்க வேண்டும். அதை நீங்கள் எப்படிச் செய்வீர்கள்? உங்கள் செயல்களின் விளைவுகளின் மூலம் அதை நீங்கள் செய்யலாம். எப்போதும் ஒரு வினைக்கு எதிர் வினையிருக்கும். அந்த எதிர்வினையை நீங்கள் அடையாளம் கண்டு புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஒரு பொருத்தமான சூழலில் வாழ்வது அவசியம். ஆசிரமம் போன்ற ஒரு ஆன்மிகச் சூழலில் வாழ்வது ஒரு துணையாக இருக்கும்.

இருப்பினும், சந்நியாசியின் பாரம்பரிய ஆடைகளை அணிந்து கொள்வது மட்டும் உங்களுக்கு எந்த வகையிலும் உதவாது. நமது இந்து தர்மத்தின்படி, காவி உடை அணிவது என்பது நீங்கள் கடவுளுக்கும் உங்களுக்கும் ஒரு வாக்குறுதி அளிப்பதாகும். நீங்கள் கடவுளை நம்புவதற்கும், ஆன்மிக ரீதியாக உங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் உங்களை முழுமையாகக் கடவுளிடமும் ஆன்மிக வாழ்விலும் அர்ப்பணித்துக் கொள்வதற்கும் சபதம் செய்கிறீர்கள். மிக உயர்ந்த தர்மத்தைப் பின்பற்றுவதற்கு நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள்.

ஒருமுறை காவியுடை அணிந்த பிறகு, நீங்கள் பெயரையும் புகழையும் அல்லது விளம்பரத்தையும் தேடக்கூடாது – அது முற்றிலும் தவறானது. நீங்கள் கடவுளிடம் நேர்மையாக இருக்க வேண்டும்.

வெறும் வாயால் மட்டும் பேசக் கூடாது. உங்கள் வாயால் எதையும் சொல்லலாம். ஒரு புத்தகத்தில் உள்ள எதையும் படிக்கலாம்; எதையும் விளக்கலாம். ஆனால் உங்கள் இதயம் என்ன சொல்கிறது? நீங்கள் உங்ககள் இதயத்தைத் தொட்டு, பின்னர் நேர்மையாகவும் உண்மையாகவும் பேச வேண்டும். சில சமயங்களில் நீங்கள் கண்களை மூடிக்கொண்டு, உண்மைகளைப் பிரகடனம் செய்வது போல் பேசுகிறீர்கள். ஆனால், அவை உண்மைகள் அல்ல, வெறும் பொய்களே.

ஆன்மிகம் என்பது ஒரு விற்பனைப் பொருள் அல்ல அது எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்ப்பதில்லை. அது ஆன்மிகத்தின் மீதான தூய அன்பினால் மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும். நீங்கள் ஏன் பிறந்தீர்கள். எவ்வளவு காலம் வாழப் போகிறீர்கள்? யாராவது 120 ஆண்டுகள் வாழ்வார்களா? இல்லை. 60, 70 அல்லது 80 ஆண்டுகள் மட்டுமே— அதன்பிறகு உங்களுக்கு என்ன நடக்கும்? மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்பதைப் பற்றியது என் கவலை அல்ல. அதற்கு முன்பு என்ன நடக்கிறது, அதாவது நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள் என்பதைப் பற்றியதுதான் என் கவலை. இதைப்பற்றித்தான் நான் அக்கறை கொள்கிறேன். இந்தியாவிலும் இலங்கையிலும் பெற்றோரின் இறுதிச் சடங்குகளைப் பிள்ளைகள் செய்வது வழக்கம். ஆனால், பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்போது, பிள்ளைகள் அவர்களைப் புறக்கணிக்கிறார்கள். பெற்றோர்கள் உயிருடன் இருந்தபோது அவர்களுக்குச் சேவை செய்யாமல், அவர்களின் இறுதிச் சடங்குகளைச் செய்வது வீண் என்று நான் கருதுகிறேன்.
நீங்கள் அனைவரும் மிகவும் பாக்கியம் பெற்றவர்கள். இந்தப் பூமியில் பிறந்திருப்பதும், ஆன்மிக வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதும் சரியான திசையில் செல்வதும் நீங்கள் பெற்ற பாக்கியம். இந்த வழியில் தொடர்ந்து செல்வதன் மூலம், நீங்கள் ஒரு உயர்நிலையை அடைந்து, ஆன்மிகத்தைப் பற்றி ஏதேனும் ஒன்றைப் புரிந்து கொள்வீர்கள்.

இது ஏதோ ஒரு மதப்பிரச்சாரம் அல்லது மதம் என்பது இறைவனிடம் நம்பிக்கை கொள்வதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. உங்கள் ஆன்மாவை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்வீர்கள்? உங்களை நீங்களே எப்படி மேம்படுத்திக் கொள்வீர்கள்? நீங்கள் எப்படி மிக உயர்ந்த நிலையை அடைவீர்கள்? இந்தப் பௌதிக உலகில் உள்ள உங்கள் ஆசைகளால், உங்கள் மனம் ஒரு குரங்கைப் போல குழப்பமடைந்து, இங்கும் அங்கும் எல்லா இடங்களிலும் அலைபாய்கிறது. உங்கள் மனம் எப்போதும் இப்படித் தாவிக் கொண்டிருந்தால், நீங்கள் எப்படி தர்மப் பாதையில் பயணித்து, உங்கள் மனதை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வீர்கள்?

(...) ஒருவர் 120 வயது வரை வாழ்ந்தாலும் சரி அல்லது இளமையிலேயே இறந்தாலும் சரி, இறப்பதற்கு முன் அவர்கள் எதை உணர்ந்திருப்பார்கள்? நான் உங்களுக்கு ஒன்றைக் காட்ட விரும்புகிறேன். ஆனால், அதைப் பார்க்க நீங்களும் தயாராக இருக்க வேண்டும். இந்த உண்மையை நான் உங்களுக்குக் காட்டி விளக்குவதற்கு முன், உங்களிடமிருந்து நான் என்ன எதிர்பார்க்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? உங்கள் உண்மையான பக்தியையும் நிஜமான அன்பையும் மட்டுமே நான் எதிர்பார்க்கிறேன். நீங்கள் ஏன் நேர்மையற்ற அன்பையும் போலியான பக்தியையும் வெளிபடுத்த தேர்வு செய்கிறீர்கள்? அப்படி வாழ்வது தவறல்லவா? நடிக்காதீர்கள், நீங்கள் காட்டும் பக்தியும் அன்பும் உங்கள் இதயத்திலிருந்து வருகிறதா என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

நீங்கள் உண்மையிலேயே கடவுளை நம்புகிறீர்களா? அவர் இயேசுவாகவோ, கிருஷ்ணராகவோ, புத்தராகவோ அல்லது முகமதுவாகவோ இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்த உலகில் உள்ள அனைத்தும் பொய்யானவை; கடவுள் ஒருவரே உண்மை. இந்தக் கடவுளை நீங்கள் உணர்ந்து கொள்ள உதவுவதே எனது முதன்மை நோக்கம். மேலும், இந்தக் கடவுளையோ அல்லது தெய்வீகத்தன்மையையோ உணர்ந்து கொள்ள, உங்கள் உடல், மனம் மற்றும் புத்தி ஆகியவற்றை ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் வைத்திருக்க வேண்டும்.

நாம் ஏன் இந்த ஆசிரமத்தைக் கட்டி, இந்த மாதிரியான சூழலை உருவாக்கியுள்ளோம்? இங்கு எல்லாவிதமான அத்தியாவசியப் பொருட்களும் உள்ள ஒரு கடை இருக்கிறது; நான் ஒரு முதலாளி என்று காட்டிக் கொள்வதற்காக மட்டும்தான் அதைச் செய்தேன் என்று நினைக்கிறீர்களா? இல்லை. நீங்கள் இந்த ஆசிரமத்தில் இருக்கும்போது, உங்களால் கடவுளைப் பற்றிச் சிந்திக்கவும், 'சும்மா இருக்கவும்' முடிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்கள் மனம் அலைபாய அனுமதிக்கக் கூடாது. சில நேரம் விரதம் இருப்பது அவசியமாக இருக்கலாம். ஆனால் எல்லா நேரமும் விரதம் இருக்க முடியாது. நீங்கள் பசியாக இருக்கும்போது, திருச்சிக்குச் சென்று உங்கள் மனதை அலைக்கழிக்காமல் பழங்களையும் சிற்றுண்டிகளையும் வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தக் கடை அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரமச் சூழல் உங்கள் மனதை அமைதியாகவும் தொந்தரவின்றியும் வைத்திருக்கவே உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் திருச்சிக்குச் சென்றால், அங்கு நீங்கள் பார்க்கும் எல்லாவற்றாலும் உங்கள் மனம் திசை திருப்பப்படும்.

> "நான் இந்த உலகில் இருக்கும் வரை, உங்களுக்குள் இருக்கும் தெய்வீகத்தை நீங்கள் உணர்வது எப்படி என்பதைக் காட்டுவது மட்டுமே என் ஒரே விருப்பம்."

நீங்கள் உங்கள் நாட்டிற்குத் திரும்புவதற்கு முன்பு, சில நாட்கள், ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் மட்டுமே இங்கு இருப்பீர்கள். அந்த குறுகிய காலத்தில் நான் உங்களைச் சுத்தப்படுத்த வேண்டும். எப்படி? அதனால்தான், நீங்கள் இங்கு இருக்கும்போது 'சும்மா இருங்கள்' என்று சொல்கிறேன். இந்த ஆசிரமத்தில் உள்ள சூழல், இந்த காற்று கூட நீங்கள் உண்மையை உணர்வதற்கு உதவும் — இதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை! நான் இங்கு வளரும் செடிகளுடன் தவறாமல் பேசுகிறேன்; அவை பார்க்கும் அனைவரையும் ஆசீர்வதிக்குமாறு அவற்றிடம் சொல்கிறேன். அதனால்தான் இங்குள்ள பூக்கள் மிகவும் அழகாக இருக்கின்றன. உங்கள் மனமும் அந்தப் பூக்களைப் போலவே அழகாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்கள் மனதை அந்தப் பூக்களைப் போல அழகாக மாற்றுவது எப்படி? உங்கள் மனம் அசுத்தமான நீரைப் போல இருக்கலாம். ஆனால் அந்த அசுத்தமான நீரிலும் கூட பூக்கள் மலர முடியும் — சேற்று நீரில் மலரும் தாமரையைப் போல உங்களுக்குள் சேறு இருந்தாலும், அங்கே ஒரு தாமரை மலர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உங்களை அவ்வளவு எளிதில் விட்டுவிட மாட்டேன் — உங்களுக்குள் தெய்வீகத்தின் தாமரை விதையை நான் விதைப்பேன். உங்களிடமிருந்து நான் எதையும் விரும்பவில்லை. உங்கள் பணத்தையோ அல்லது உடைமைகளையோ அல்ல. அப்படி எதையும நான் எதிர்பார்க்கவில்லை. நான் இந்த உலகில் இருக்கும் வரை, உங்களுக்குள் இருக்கும் தெய்வீகத்தை நீங்கள் உணர்வது எப்படி என்பதைக் காட்டுவது மட்டுமே என் ஒரே விருப்பம்.

இங்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லாத யாராவது இருந்தால், நீங்கள் இங்கு செய்வதற்கு எதுவும் இல்லை என்று நான் தான் முதலில் சொல்வேன். இங்கு வந்து உங்கள் நேரத்தை ஏன் வீணடிக்கிறீர்கள்? கடவுள் இல்லை என்று நீங்கள் நினைத்தால், இதுதான் உண்மை இல்லை என்று நீங்கள் நினைத்தால், ஆன்மிக ரீதியாக நீங்கள் வளர்ச்சி பெறுவதற்கு இது சரியான இடம் அல்ல. உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்; நீங்கள் செல்வதற்கு வேறு நல்ல இடங்கள் இருக்கின்றன. உங்களுக்கு என் ஆசீர்வாதங்களைத் தெரிவித்த பிறகு, உங்களை இங்கிருந்து செல்லும்படி நான் கூறுவேன். ஏன்? ஏனென்றால், நீங்கள் இங்கு வரும்போது கடவுளையும் உங்களுடன் அழைத்து வர வேண்டும். நான் உங்களை இங்கிருந்து செல்லச் சொன்னால் அதன் அர்த்தம் உங்களால் கடவுளை 'அடைய' முடியாது என்பதுதான்.

உங்கள் இதயத்தை ஒரு இரும்புப் பூட்டால் பூட்டி விட்டீர்கள் – இல்லை, ஒன்றில்லை, ஐந்து அல்லது ஆறு பூட்டுகளால் பூட்டிவிடடு, பிறகு எல்லா சாவிகளையும் தொலைத்து விட்டீர்கள். அப்படிப்பட்ட இதயம் எஃகுபோல கடினமானது. அங்கே கடவுளை வைப்பதற்கு நான் முதலில் ஒரு சுத்தியலை எடுத்து அந்தப் பூட்டுகள் அனைத்தையும் உடைக்க வேண்டும்; அப்போதும் கூட, உண்மை உங்கள் வாயிலிருந்து வெளிவராது. உங்கள் இதயத்தின் பூட்டுகளை நான் சுத்தியலால் அடித்துத் துண்டு துண்டாக உடைக்கும்போது, குறைந்த பட்சம் அப்போது நீங்கள் அந்த வலியை உணர்ந்து, அதே தவறுகளை மீண்டும் செய்யக் கூடாது என்று உறுதிமொழி எடுக்க வேண்டும்.

உங்கள் இதயம் திறக்கப்பட்டால் மட்டுமே, அதற்குள் என்ன இருக்கிறது என்பதை என்னால் பார்க்க முடியும். ஆனால் நான் ஒன்று சொல்கிறேன். உங்கள் இதயம் தூய்மையாக இருக்க வேண்டும். மேலும் அது திறக்கப்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எனவே, உங்கள் இதயத்தைத் திறக்கும் சாவியை இழந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்; நீங்கள் நினைக்கும்போதெல்லாம் அதை கையில் எடுக்கும்படி, உங்கள் கைக்கு எட்டும் தூரத்தில் வைத்திருங்கள். ஒருவேளை கடவுள் உங்கள் இதயத்திற்குள் வர விரும்பினால், உங்களால் சாவியை எங்கும் கண்டு பிடிக்க முடியாவிட்டால் என்ன செய்வது? கடவுள் எங்கே போவார்? அல்லது நான் உங்கள் இதயத்திற்குள் வர விரும்பினால், சாவி இல்லாத போது நான் எப்படி வர முடியும்? உங்கள் மனைவியோ அல்லது கணவனோ கூட உங்கள் இதயத்திற்குள் நுழைய முடியாது. அன்பு இல்லையென்றால் யாராலும் உள்ளே நுழைய முடியாது.
ஆகவே, கடவுள் உங்கள் இதயத்தில் வாசம் செய்யவும், இந்த தெய்வீக நிலையை அடையவும் நீங்கள் முதலில் உள் தூய்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்காக உங்கள் மனதை தேவையற்ற உலகியல் தகவல்களால் நிரப்பக் கூடாது. ஒரு மரம் கீழே விழுவதாக வைத்துக் கொள்வோம்; இதன் பொருள் அந்த மரத்தின் காலம் முடிந்து விட்டது என்பதாகம். மரம் விழுவதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். அது எதுவாக இருக்கும் என்று நீங்கள் ஊகிக்கத் தொடங்கினால் குழப்பமடைவீர்கள். எது விழுந்து விட்டதோ, அதை விட்டு விடுங்கள். அதற்குப் பதிலாக, விழாத மற்ற எல்லா மரங்களையும் பாருங்கள்.

இங்கே ஆசிரமத்தில்கூட, சில சமயங்களில் நான் ஒரு மரத்தை வேரோடு பிடுங்கி அகற்றி விடுவேன். சில மரங்கள் தானாகவே விழுந்து விடும். நான் வேரோடு பிடுங்கும் மரங்களுக்கும், தானாகவே விழும் மரங்களுக்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்குத் தெரியுமா? சில மரங்களை நான் பூச்சிகள் தாக்கியிருப்பதால் பிடுங்கி விடுகிறேன். அவை மற்ற மரங்களையும் தொற்றுவதற்க முன்பு, நான் அவற்றை வேரோடு பிடுங்கி விடுகிறேன். ஆனால் ஒரு மரம் தானாகவே விழுந்தால், அதன் பிரதான வேர் பலவீனமாக இருக்கிறது என்று அர்த்தம். எனவே, இந்த இரண்டு விஷயங்களில் ஏதேனும் ஒன்று நடக்கலாம். ஒன்று, வேர் போதுமான பலத்துடன் இல்லாததால் அது தானாகவே விழுந்து விடும். அல்லது, மரம் பூச்சிகளால் தாக்கப்பட்டால், அதன் உரிமையாளர் அதை வேரோடு பிடுங்கி அகற்றி விடுவார். எந்தவொரு தேவையற்ற தொற்றும் உங்களைத் தாக்க அனுமதிக்கக் கூடாது என்பதை விளக்குவதற்காகவே நான் இதைச் சொல்கிறேன். உங்கள் உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். அதைத் தூய்மைப்படுத்துங்கள். உங்கள் ஆன்மிக நிலையை உயர்த்துங்கள்.
நீங்கள் ஆன்மிகத்தைத் தேடி இங்கு வந்தீர்களா, அல்லது ஒரு குறுகிய விடுமுறைக்காக வந்தீர்களா? நீங்கள் ஆன்மிகத்திற்காக வந்திருந்தாலும் சரி, அல்லது ஒரு சிறிய ஓய்விற்காக வந்திருந்தாலும் சரி. நீங்கள் வந்திருக்கும் இந்த இடம் ஒரு நல்ல இடம்தான். விடுமுறைக்காக நீங்கள் உலகில் பல இடங்களுக்குச் சென்றிருக்கலாம். ஆனால், நீங்கள் ஒரு ஆன்மிக இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். இதன் பொருள், நீங்கள் உங்கள் முற்பிறவியில் அல்லது இந்தப் பிறவியில் ஏதேனும் ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்க வேண்டும்.

இந்தியாவின் மண் ஒரு தெய்வீக மண். வேறு எங்கும் காண முடியாதவற்றை இந்த மண்ணில் நீங்கள் காண்பீர்கள். இந்த மண்ணில் எல்லாம் வளர்கிறது. எனவே, வேறு எந்த நாட்டிலும்

காணப்படுபவை அனைத்தும் இங்கும் காணப்படும். மேலும், அவதாரங்களையும் மகாஞானிகளையும் இந்த மண்ணில் மட்டுமே நீங்கள் காண்பீர்கள். இந்த பூமியில் மிகவும் உயர்ந்த நிலையில் பரிணமித்த பல ஆன்மாக்கள் உள்ளனர்.

இருப்பினும், இங்கு வறுமையும் பல பிரச்சினைகளும் சிரமங்களும் உள்ளன. இதனால், மக்களால் ஆன்மிகத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளத் தேவையான நேரத்தை ஒதுக்க முடிவதில்லை. அவர்கள் சாப்பிடுவதற்காகப் பணம் சம்பாதிக்க வேலை செய்ய வேண்டியிருக்கிறது. பிறகு தங்களால் முடிந்த நேரத்தை ஆன்மிகத்திற்காகச் செல்விடுகிறார்கள். நீங்கள் இங்குள்ளவர்கள் உங்களை ஏமாற்றுதாக நினைக்கிறீர்கள். ஆனால் அது அவர்களின் வறுமையின் காரணமாகவே என்பதைச் சொல்வதற்காகவே நான் இதைக் கூறுகிறேன். எனவே, அவர்களுக்காகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள். அவர்கள் மீது கருணை கொண்டு, அவர்களை மன்னிக்கச் சொல்ல கடவுளிடம் கேளுங்கள்.

நான் இதைச் செய்கிறேன் — நீங்கள் கடவுளை உங்கள் இதயத்திற்குள், உங்கள் மனதிற்குள் மற்றும் உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதிக்குள்ளம் அனுமதிக்க வேண்டும். அதை நீங்கள் எப்படிச் செய்வீர்கள்? உங்கள் காதுகள் வழியாக, உங்கள் கண்கள் வழியாக, உங்கள் மூக்கு வழியாக அவரை உள்ளே கொண்டு வர முடியுமா? அல்லது வேறு எப்படி அதைச் செய்வீர்கள்? நீங்கள் கடவுளை நம்பாததால்தான், நீங்கள் உங்கள் சொந்தக் கண்களால் அவற்றைப் பார்த்து, ஒரு உயர் சக்தியை நம்ப வேண்டும் என்பதற்காக, நான் உங்கள் முன்னால் இந்த அற்புதங்களைச் செய்கிறேன். இல்லையென்றால், என் ஆன்மிகப் பேச்சுகளைக் கேட்க உங்கள் காதுகளைப் பயன்படுத்துங்கள், கடவுள் மீது நம்பிக்கை கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். அல்லது இங்கே இருங்கள், ஆசிரமக் காற்றை சுவாசியுங்கள், கடவுள் மீது நம்பிக்கைக் கொள்ளத் தொடங்குங்கள்.

ஆன்மிகத்தைப் புரிந்து கொள்ள உங்கள் கண்கள், காதுகள் மற்றும் மூக்கைப் பயன்படுத்தலாம். ஆனால் உங்கள் வாய் அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் வாக்கு என்ன பேச வேண்டும், எப்போது பேச வேண்டும் என்று தெரியாது. நீங்கள் தேவையற்ற கதைகளைச் சொல்லத் தொடங்குவீர்கள். அதனால் மற்றவரையும் தேவையற்ற முறையில் பேசும்படி தூண்டி விடுவீர்கள். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்வினை உண்டு என்று நான் சொல்வதன் அர்த்தம் இதுதான். நீங்கள் அமைதியாக இருந்து, 'சும்மா' இருந்தால் மற்றவரும் அமைதியாக இருந்து 'சும்மா' இருப்பார். ஆனால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்றால், கடவுளைப் பார்த்து, அவருடன் கைக் குலுக்கியது போல அந்த நபரிடம் பேசுவீர்கள். அப்போது மற்றவர் பதிலுக்கு, தான் நேற்றுத்தான் கடவுளைப் பார்த்ததாகச் சொல்வார். நீங்களும் அவரும் ஒரு தேவையற்ற விவாதத்தைத் தொடங்குவீர்கள். இன்னொருவர் வந்து தன்னிடம் குணப்படுத்தும் சக்தி இருப்பதாகச் சொல்வார். இன்னும் ஒருவர், தன்னுள் ஆவிகளின் சக்தி இருப்பதாகச் சொல்வார். பிறகு யாராவது வந்து, தங்களால் ஆவிகளுடன் பேச முடியும் என்று சொல்வார்கள். நீங்கள் ஆவிகளுடன் பேசத் தொடங்கினால், நீங்களும் ஒரு ஆவியாக மாறி விடுவீர்கள்! எனவே, கடவுளை நினையுங்கள், சும்மா இருங்கள்.

ஆவிகளையும் மற்ற எதிர்மறைச் சக்திகளையும் உங்களுக்குள் கொண்டு வர நினைக்காதீர்கள்; எதிர்மறை அதிர்வுகள் உள்ளே வர அனுமதிக்காதீர்கள். நீங்கள் கடவுளின் அருளை மட்டுமே அடைக்க வேண்டும். எப்போதெல்லாம் கடவுளின் அருள் உங்கள் உள்ளத்தில் நுழைகிறதோ, அப்போதெல்லாம் உங்கள் உடல் தூய்மையாக்கப்பட்டு பரிசுத்தமாகும். உங்கள் முகம் மகிழ்ச்சியால் பிரகாசிக்கும்; நீங்கள் மகிழ்ச்சியாகவும் எப்போதும் புன்னகையுடனும் இருப்பீர்கள். ஆனந்தத்தின் ஒளி வெளிப்படும். அது உங்களுக்குள் கடவுள் இருப்பதைக் காட்டும். இது பூசலார் நாயனாருக்கு சிவபெருமான், "நான் உன் இதயத்தில் குடியேற வந்துள்ளேன்" என்று கூறியது போன்றது. (அவர் தன் இதயத்தில் முழுமையாக ஒரு கோவிலைக் கட்டிய ஒரு ஏழை பக்தர்) ஆனால், அதற்குப் பதிலாக எல்லோரும் வெளியில்தான் ஒரு கோவிலைக் கட்டுகிறார்கள்!

# உலகெங்குமுள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனச் செய்திகள்

## நவராத்திரி 2025–பிரேமானந்தா ஒற்றுமை கிளை ஸ்தாபனம், மொன்ட்ஸ் டீ ஃபோரெஸ், பிரான்ஸ்

இந்தியாவில் மட்டுமல்லாமல், கடந்த இருபது ஆண்டுகளாக பிரான்சிலும், நவராத்திரி எனக்கு எப்போதும் ஒரு சிறப்பான ஆன்மிகத் தொடர்புக் காலமாக இருந்து வருகிறது. தெய்வீக அன்னையின் ஆற்றல் சுவாமிஜியின் ஆற்றலுக்கு மிக நெருக்கமானது என்று நான் எப்போதும் உணர்ந்திருக்கிறேன். மேலும், அதை நான் ஒரு வகையான 'இயக்கத்திலுள்ள உணர்வு' போல உணர்ந்துள்ளேன். அது ஒரு சக்திவாய்ந்த ஆற்றலால் நிரப்பப்பட்ட ஒரு உணர்வு, அது இயல்பாகவே என் உடலை இயக்கத்தில் ஆழ்த்துகிறது. பெரும்பாலும் சேவை செய்வதில் ஈடுபடுத்துகிறது. மேலும், மிகுந்த கூர்மையான ஒருபுரிதலையும் ஏற்படுத்துகிறது.



தெய்வீக அதிர்வுகளின் இருப்பிடமான, "சிலையில் உள்ள பெண்" வடிவத்திலான அன்னை தெய்வம், எனக்கு வெளியே உள்ள ஒன்றாக, என் வாழ்நாள் முழுவதும் படிப்படியாக மாற்றம் அடைந்துள்ளது.

ஆசிரமத்தில் நான் இருந்த ஆண்டுகளில், சுமார் 2000 – ஆம் ஆண்டுவாக்கில், என் மீதான பார்வையை மாற்றிய ஒரு அனுபவம் எனக்கு ஏற்பட்டது. அது நவராத்திரி காலம், நான் பூஜை மண்டபத்தின் பொறுப்பாளராக இருந்தேன். பல பணிகளை நிர்வகிப்பதற்காக நான் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்ததால, நவராத்திர சாலம் பொதுவாக எனக்கு மிகவும் பரபரப்பான ஒரு காலமாக இருக்கும்.

ஒரு மாலைப்பொழுதில் அபிஷேகத்தின் போது, நான் அந்தச் சிலையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த போது, திடீரென்று உள்ளிருந்து ஒரு குரல், "நான் இந்தச் சிறிய உருவம்தான் என்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்டது. பிறகு, உள்ளே முடிவில்லாமல் எதிரொலிக்கும் ஒரு உரத்த சிரிப்பொலி கேட்டது. என் கண்கள் மூடிக் கொண்டன. நான் ஒரு மிகவும் மென்மையான ஒளிரும் வெளியில் 'உள்ளீர்க்கப்படுவது' போன்ற உணர்வை அடைந்தேன். 'நான்' என்று நான் எதையெல்லாம் தொடர்புபடுத்தியிருக்க முடியுமோ, அவை அனைத்தும் அதில் கரைந்து போவது போல் தோன்றியது. நான் அந்தத் துடிப்பான தங்கியிருக்கும் ஒரு இயல்பான திறனுடன் இருந்தேன்; அது வழக்கத்திற்கு மாறானது. ஏனெனில், பொதுவாக அதற்கு என் தரப்பில் அதிக முயற்சி தேவைப்படும்.

மீண்டும் ஒரு முறை நான் கேட்டேன்; "இது மிகவும் எளிதானது, கடினமானதல்ல; இது முதல் படி." நான் மீண்டும் என் கண்களைத் திறந்தபோது, பூஜை அறையில் யாருமில்லை – சில நிமிடங்கள் போலத் தோன்றிய நேரம் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்திருந்தது! பிறகு, நான் வெளியே வந்தபோது, என் உடலும் மனமும் மிகவும் இலகுவாகவும் ஆற்றல் நிறைந்ததாகவும் உணர்ந்தன. இந்தியாவில் 'சக்தி' அல்லது தெய்வீகத்தின் 'ஆற்றல்' அம்சமாகக் கருதப்படும். 'சிவன்' அல்லது உணர்வு அம்சத்திற்குப் பூரணமாக விளங்கும் அந்தத் தெய்வீகத் தாய், என் சொந்த அனுபவத்தில், வடிவங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நுட்பமான உயிருள்ள இருப்பிடம் என்பதை நான் முதன்முறையாக உணர்ந்தேன்.




## நவதானியங்களுடன் ஒன்பது கும்பங்கள்

இந்த ஆண்டு நவராத்திரி விழா தொடங்குவதற்கு சுமார் பத்து நாட்களுக்கு முன்பே நான் அதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கினேன். கோவிலுக்காகத் துணி வாங்க வேண்டியிருந்தது. மேலும், வீட்டைச் சுத்தம் செய்து, பொருட்களை நகர்த்தி, தயார்படுத்த வேண்டும்; நான் வழக்கமாக மரவேலை செய்யும் கூடமாகப் பயன்படுத்தும் ஒரு இடத்தை சுமார் இருபது பேர் தங்குவதற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும்; வழிபாடுகள் மற்றும் கூட்டுச் செயல்பாடுகளுக்குத் தேவையான தங்குமிடங்களையும் மற்ற எல்லாவற்றையும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதிர்ஷ்டவசமாக, கிளை ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் சமையலுக்கும், பூக்கள் மற்றும் சில அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கும், ஆடைகளைத் தைப்பதற்கும் எனப் பல வழிகளிலும் உதவினார்கள். நாங்கள் பொதுவாக ஒரு நல்ல குழுவாகச் செயல்படுவோம்.

இருப்பினும், கணிக்க முடியாத தொடர் நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்து, காரியங்களின் போக்கைத் தொடர்ந்து சீர்குலைத்தன. முதலில், எனது ஹார்மோனியத்தின் ஒரு பகுதி உடைந்து போனது. அதைச் சரிசெய்ய முயற்சிப்பதற்காக நான் லியோனுக்குப் பலமுறை பயணிக்க வேண்டியிருந்தது. அங்கே, அதன் ஆயுட்காலம் முடிந்து விட்டதாகவும், அதைச் சரிசெய்வது கடினம் என்றும், மேலும், அதற்கான செலவும் மிகவும் அதிகம் என்றும் என்னிடம் கூறப்பட்டது. நான் அதிர்ச்சியடைந்தேன், குறிப்பாகச் சில ஆண்டுகளுக்கு முன்புதான் இந்தியாவில் அதை 'புதியது' என்று வாங்கி இருந்தேன். எனக்குப் பெரும் ஆச்சரியமாக, அனுபவம் வாய்ந்த அந்த விற்பனையாளர், அது தன் வாழ்நாளில் பார்த்ததிலேயே மிகவும் பழமையான ஹார்மோனியம் என்று கூறினார்! இது நிஜமாகவே மிகவும் கெட்ட நேரம்!

பிறகு எனது குளிர்சாதனப் பெட்டி இதே நேரத்தில் பழுதடைந்தது. இதற்காக நான் நகரத்திற்கு இருமுறை பயணிக்க வேண்டியிருந்தது. அடுத்து, என் முதுகு கடுமையாகப் பாதிக்கத் தொடங்கியது. அதனால் எலும்பு மருத்துவரிடம் அவசரமாகச் செல்ல வேண்டியிருந்தது. அதன்பிறகு, ஷாம்போ என்ற பூனையின் பின்பகுதியில் பலத்த அடிபட்டது. இதன் விளைவாக கால்நடை மருத்துவரிடம் செல்ல வேண்டியிருந்தது. கட்டாய ஓய்வு மற்றும் தொடர்சிகிச்சையும் தேவைப்பட்டது.

அதற்குப் பிறகு சிறிது நேரத்திலேயே மேலும் ஒரு சம்பவம் நடந்தது; கோவிலுக்கு மேலே உள்ள பரணில் பல வாரங்களாக இருந்த ஒரு பெரிய குளவிக் கூடு — அது முதன்முதலில் தோன்றியதிலிருந்து பலமுறை புகைமூட்டம் செய்யப்பட்டிருந்த போதிலும் — திடீரென்று கோவிலின் கூரை வழியாகவும், அருகிலுள்ள ஒரு சிறிய மாடத்தின் கூரை வழியாகவும் டஜன் கணக்கான குளவிகளை வெளியே அனுப்பியது. கூரையில் பலமுறை துளைகள் போட்டு உள்ளிருந்தே தலையிட வேண்டியிருந்தது. அப்படியிருந்தும், பக்தர்கள் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, மாலை அபிஷேகத்தின் போது, மற்றொரு எதிர்பாராத படையெடுப்பு நிகழ்ந்தது.

இப்போது கோவிலுக்குள் டஜன் கணக்கான குளவிகள் பறந்து கொண்டிருந்தன. அது ஹிட்ச்காக்கின் 'தி பேர்ட்ஸ்' திரைப்படம் போல இருந்தது. ஆனால் பறவைகளுக்கு பதிலாக குளவிகள்! இந்தத் துயரத்திற்கு எப்படி முற்றுப்புள்ளி வைப்பது என்று யோசித்தப்படி நான் அமைதியாக இருந்தேன். நவராத்திரி காலத்தில் எதையும் கொல்வது எனக்கு சாத்தியமற்றது. ஆனால், இந்தப் பிரச்சினையை

அம்பாளிடம் விட்டுவிடுவது இனி போதாது என்பதை நான் முழுமையாக உணர்ந்தபோது, என் கொள்கைகளுக்கு எதிராக இருந்தாலும் நான் செயல்பட வேண்டும் என்று உணர்ந்தேன். அப்போது 1993 – ல் ஆசிரமத்தில் நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வந்தது. வெறிநாய் ஒன்று ஆசிரமத்தைச் சுற்றியுள்ள பல கிராமவாசிகளைக் கடித்திருந்தது. மேலும் அந்த நாயைப் பிடித்துக் கொல்லும்படி சுவாமி ஒரு சிறுவர் குழுவை அனுப்பினார். அந்த நேரத்தில, நான் அதிர்ச்சியடைந்தேன். ஆனால், சில சூழ்நிலைகளில் கூட்டு நலன் மற்ற எல்லாவற்றையும் விட முன்னுரிமை பெறுகிறது என்பதை பின்னர் நான் புரிந்து கொண்டேன். (இருப்பினும், அந்தச் சம்பவத்தில் இறுதியில் கிராமவாசிகள்தான் நாயைப் பிடித்து கொன்றனர்). அந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்தது, இறுதியாக உதவி தேடி அந்தக் குளவிகளை நிரந்தரமாக ஒழிக்க எனக்குத் தேவையான உந்துதலைக் கொடுத்தது.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்ட பிறகு, முன்பதிவு செய்திருந்தவர்களில் பலர் ஒருவர் பின் ஒருவராக இரத்துச் செய்யத் தொடங்கினர். நீங்கள் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும் போது இதுபோன்ற எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படுவது சகஜம்தான். ஆனால், இந்த விஷயத்தில் மூன்றில் ஒரு பங்கினர் கடைசி நிமிடத்தில் பல்வேறு காரணங்களுக்காக ரத்து செய்து விட்டனர். அதனால் நான் தங்குமிட ஏற்பாடுகளை பலமுறை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. ஓ சுவாமிஜி, நீங்கள் உயிருடன் இருந்தபோது ஆசிரமத்தில் இருந்ததைப் போலவே இருந்தது!

இந்த நவராத்திரி செயல்முறையில் எப்போதும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் தெய்வீக சக்தியை அழைத்த உடனேயே அது அங்கே வந்து விடுகிறது! இந்த ஆண்டு, இந்தியாவில் ஜோதிட ரீதியாகக் கணக்கிடப்பட்ட 'சரியான நேரத்தை' மதித்து, நள்ளிரவில் எழுந்து விதைகளை விதைத்து, கும்பங்களை அமைக்க வேண்டியிருந்தது.

உண்மையைச் சொல்லப்போனால், வெறும் இரண்டு மணி நேரத் தூக்கம் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகள் அனைத்திற்கும் பிறகு, அது ஒரு பெரும் முயற்சியாகவே இருந்தது. ஆனால், நவராத்திரி செயல்முறையில் நுழைவது எப்பேர்ப்பட்ட அற்புதம்! அந்தச் சக்தி அங்கே நிறைந்திருக்கிறது. நாம் எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம். தடைகள், சோர்வு, ஏன், எதற்கு என்ற கேள்விகள அனைத்தையும் மனம் அமைதியாகிறது. அந்த தெய்வீகப் பிரசன்னம் மட்டுமே நிலைத்திருக்கிறது.

முதல் அபிஷேகத்தின் போது, கிளை ஸ்தாபனத்திலிருந்த மூன்று அம்பாள்களின் சிலைகளுக்கு அலங்காரங்களைக் களைந்து, நீராட்டுவதற்காக தயார்ப்படுத்திய போது, அந்த மூன்று சிலைகளிலிருந்தும் விபூதி வெளிப்படத் தொடங்கியதை நாங்கள் கவனித்தோம்! நான் அவற்றை நன்க கழுவிய போது, நீரின ஓட்டத்தின் கீழும் கூட விபூதி உடனடியாக மீண்டும் தோன்றுவது போல் தெரிந்தது. இதற்கு முன்பு இந்த நிகழ்வை இவ்வளவு தெளிவாகவும், நேரடியாகவும் கவனிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில்லை. ஒரே நேரத்தில் வெளிப்பட்ட அந்த ஆற்றல் உண்மையிலேயே மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது – தெய்வம் உண்மையாகவே அங்கே பிரசன்னமாகியிருந்தது.
உண்மையைச் சொல்லப்போனால், இரண்டு மணி நேரத் தூக்கம் மற்றும் நடந்த எதிர்பாராத நிகழ்வுகள் அனைத்திற்கும் பிறகு, அது ஒரு பெரும் பிரயத்தனமாகவே இருந்தது. ஆனால், நவராத்திரி செயல்முறையில் நுழைவது எப்பேர்ப்பட்ட ஒரு அற்புதம்! அந்தச் சக்தி அங்கே இருக்கிறது. நாம் எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம்; தடைகள், சோர்வு, ஏன், எதற்கு என்ற கேள்விகள் அனைத்தையும் மனம் அமைதியாகிறது. அந்தப் பிரசன்னம் மட்டுமே நிலைத்திருக்கிறது.

கிளை ஸ்தாபனத்தில் உள்ள மூன்று அம்பாள் சிலைகளுக்கும் முதல் அபிஷேகம் செய்வதற்காக, அவர்களின் அலங்காரங்களை அகற்றி தயார்ப்படுத்தியபோது, அந்த மூவரின் சிலைகளிலிருந்தும் விபூதி வெளிப்படத் தொடங்கியதை நாங்கள் கவனித்தோம்! நான் அவர்களை நன்கு கழுவிய போது, நீரின் ஓட்டத்தின் கீழும் கூட, விபூதி உடனடியாக மீண்டும் தோன்றுவது போல் தெரிந்தது. இதற்கு முன்பு இந்த நிகழ்வை இவ்வளவு தெளிவாகவும், நேரடியாகவும் கவனிக்கும் வாய்ப்பு எனக்குக்

கிடைத்ததில்லை. ஒரே நேரத்தில் வெளிப்பட்ட அந்த ஆற்றல் உண்மையிலேயே மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது — தெய்வீகம் அங்கே உண்யைமாகவே நிறைந்திருந்தது.

நவராத்திரியின் நான்காம் நாளான வியாழக்கிழமை மாலை முதல் பங்கேற்பாளர்கள் வந்தனர். ஒவ்வொரு நாளும் தெய்வங்களின் நிறமும் முகபாவமும் மாறுவது எனக்கு எப்போதுமே ஆச்சரியத்தை அளிக்கிறத. நிச்சயமாக, ஆடைகளின் மற்றும் மாலைகளின் நிறம் வேறுபடுகிறது. ஒளி மாறுபடலாம். மேலும், புகைப்படங்கள் வெவ்வேறு கோணங்களில் எடுக்கப்படுகின்றன. ஆனால் தெய்வங்களின் முகபாவங்கள் நாளுக்கு நாள் மாறுகின்றன என்பது ஒரு உண்மை. அவை முற்றிலும் உயிருடன் இருக்கின்றன!

ஆதரவாக இருக்கும் இந்தப் புலப்படும் வடிவம், ஆற்றல் கடத்தப்படும் ஒரு ஊடகமாகத் தெரிகிறது. அதேபோல், ஒருவர் போதுமான உணர்திறன் கொண்டவராக இருந்தால், அதை உணர முடியும். ஒரு நாளிலிருந்து அடுத்த நாளுக்கு சூழ்நிலையும் ஆற்றலும் ஒருபோதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. என்னவொரு அற்புதம்! எங்கள் வார இறுதி வெள்ளிக்கிழமை மதியம் தொடங்கியது. பிரான்சின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அதிகமானோர் வந்திருந்தனர். பழையவர்கள், புதியவர்கள் என அனைவரையும் கண்டு வரவேற்பது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது! இந்த ஆண்டு மொண்ட்பெலியர் கிளை ஸ்தாபனத்திலிருந்து நீண்டகால பக்தர்கள் வந்திருந்தனர். பொது நிகழ்ச்சி நடைபெற்ற இந்த முதல் நாளில் ஜோசலினும் ஆனி பிரான்சுவாவும் மிகுந்த பக்தியோடு அபிஷேகம் செய்தார்கள். மேலும் அம்மனுக்காக ஆனி பிரான்சுவா பிரத்யேகமாக வடிவமைத்த அற்புதமான ஆடைகளை நாங்கள் கண்டு ரசிக்க முடிந்தது.



அடுத்தநாள், அந்த கிளை ஸ்தாபனத்தின் நம்பிக்கைக்குரிய உறுப்பினரான அக்னஸ், களிமண் மற்றும் இயற்கை பொருட்களைகப் பயன்படுத்தி சக்தி வடிவங்களை உருவாக்கும் ஒரு அழகான பயிலரங்கை நடத்தினார். அனைவரும் தங்களின் படைப்பில் அவ்வளவு ஆழ்ந்து ஈடுபட்டிருந்தனர். ஒரு சிறு சத்தம் கூட கேட்கவில்லை. இவ்வாறு, படைப்பாளிகளின் திறமையான விரல்களின் கீழ், அசல் மற்றும் தனித்துவமான வடிவங்களைக் கொண்ட பதினைந்து அற்புதமான சக்தி வடிவங்கள் உருவாயின.



பின்னர் சங்கல்பங்கள், மலர் காணிக்கைகள், மந்திரங்களுடன் அந்த அம்பாள் சிலைகள் கோவில் வளாகத்தில் வைக்கப்பட்டன. பிற்பகலில் அவற்றை ஆற்றில் கரைப்பதற்காக எடுத்துச் செல்ல தயாராக இருந்தன. இந்தப் படைப்பு — கரைப்பு இயக்கம், இறப்பு — மறுபிறப்பு என்ற ஒரு நிஜமான செயல் முறையாகும். இதை நாம் உணர்வுபூர்வமாகப் பயிற்சி செய்தால், நமது வாழ்க்கையின் நிகழ்காலத்தில் மறுபிறவி எடுப்பதற்காக பழையவற்றைக் கரைத்து விடும் நமது விருப்பங்களுக்கு இது ஆதரவளிக்கிறது. உண்மையில், முழு நவராத்தியும் இதே கோட்பாடுகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது.

ஒன்பது என்ற எண் — நடப்பட்ட ஒன்பது விதைகள், ஒன்பது கும்பங்கள், ஒன்பது இரவுகளில் வழிப்படப்படும் சக்திகளின் ஒன்பது அம்சங்களை குறிக்கிறது. ஒரு சுழற்சியின் நிறைவைக் குறிக்கிறது. ஏனெனில் ஒன்பதுக்குப் பிறகு மீண்டும் ஒன்றுக்குத் திரும்புவது ஒரு புதிய சுழற்சியின் தொடக்கமாகும்.

இது வாழ்க்கையின் மூன்று நிலைகளையும் குறிக்கிறது. ஒவ்வொன்றும் பெண்மையின் ஒரு தனித்துவமான அம்சத்துடனும் ஒரு அத்தியாவசிய குணத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது:

– பிறப்பு: மந்தநிலையிலிருந்து (தமஸ்) வாழ்வின் தோற்றம் – காளி மற்றும் துர்கா தெய்வங்களின் அழிக்கும் சக்தியுடனும் பூமி என்ற தனிமத்துடனும் தொடர்புடையது.

– வளர்ச்சி: லட்சுமி தேவியின் செழிப்பு மற்றும் பேரார்வத்துடன் (நெருப்பு) தொடர்புடைய செயலில் உள்ள விரிவாக்கத்தின் கட்டம் (ரஜஸ்).

– கரைதல் அல்லது கடந்த நிலை: (சத்வம்) ஆகாயத்தின் தனிமத்தைக் குறிக்கும் வெண்ணிற சரஸ்வதியின் தூய்மை மற்றும் ஞானத்தால் குறிக்கப்படுகிறது. இது வாழ்க்கை மற்றும் மரணத்தின் சுழற்சியே மீண்டும், மீண்டும் நிகழ்த்தப்படுகிறது.

இவையனைத்தும் சேர்ந்து வாழ்க்கை, மரணம் மற்றும் மறுபிறப்பு ஆகியவற்றின் நித்திய சுழற்சியைப் பிரதிபலிக்கின்றன.

ஒளியின் வெற்றியான விஜயதசமி, வாழ்க்கை, இறப்பு மற்றும் மறுபிறவிச் சுழற்சியிலிருந்து விடுபட்டு, அச்சக்கரத்தைக் கடந்து செல்லும் திறனைக் குறிக்கிறது. வேத கால ரிஷிகளின் கூற்றுப்படி, ஒருவர் விழித்தெழுந்து, மறுபிறவிச் சுழற்சியிலிருந்து (சம்சாரம்) தன்னை விடுவித்துக் கொண்டு மோட்சத்தை, அதாவது முக்தியை அடையும்போது இதுவே நிகழ்கிறது. எனவே, நவராத்திரி என்பது அத்வைத ஞானத்தை அடைந்து, பிறப்பு – இறப்புச் சுழற்சியிலிருந்து விடுபடுவதற்காக, நம் வாழ்வில் தீவிரமாகச் சாதனைகளைப் பயிற்சி செய்வதற்கான ஓர் அழைப்பாகும்.

எங்கள் சக்தி சிலைகளை நீரில் கரைத்து, பிராத்தனைகளைச் செய்த பிறகு, நாங்கள் ஆற்றங்கரை ஓரமாகக் காட்டில் நடைப்பயணம் மேற்கொண்டோம். வழியில் நாங்கள் சில காளான்களைக் கண்டோம். மொண்ட்பெலியரைச் சேர்ந்த பக்தரான வேணு, செடிகளின் வேர்கள் மற்றும் தண்டுகளுடன் இணைக்கப்பட்டிருந்த பகுதியில் ஒரு கருவியைப் பொருத்தி, அந்தத் தாவரங்களின் இசையை நாங்கள் கேட்கச் செய்தார். மாலையில், பஜனைகளுக்குப் பிறகு, நாங்கள் துர்க்கைக்குப் பூஜை செய்தோம். அந்த வழிபாட்டின் முடிவில், அது எங்களை ஆழ்ந்த அமைதிக்குள் இட்டுச் சென்றது.



## காட்டில் நடைப் பயணம்

ஞாயிற்றுக்கிழமை காலை, “யானைப் பாறை” எனப்படும் ஒரு புனிதமான இடத்தைக் கண்டறிய நாங்கள் புறப்பட்டோம். அது உண்மையில் ஒரு மிகப்பழமையான பெருங்கற்காலத் தளமாகும். அதில், முட்டை வடிவத்தில் உள்ள ஒரு சிறிய கல்லை மூடியபடி, மையத்தில் ஒரு பிரம்மாண்டமான கல் உள்ளது. அதைச் சுற்றி மற்ற கற்களும் உள்ளன. அந்தக் கற்களில், மாமூத் போன்ற வரலாற்றுக்கு முந்தைய விலங்கு போன்ற உருவங்களையும், அதன் பாகங்களில் செதுக்கப்பட்ட அனைத்து வகையான பிற உருவங்களையும், ஏன், ஒரு மூளை அல்லது தொப்புள் போன்ற உருவம் ஒரு கயிற்றால் இரண்டு பகுதிகளை இணைப்பது போன்ற உருவங்களையும் எளிதில் காண முடிகிறது. அது ஒரு அற்புதமான இடம். உயர் அதிர்வுகளால் நிரம்பியுள்ளது. சில சமயங்களில் எங்கள் உணரும் திறனுக்கு அப்பாற்பட்ட சக்தி வாய்ந்ததாகவும் இருந்தது. அந்த இடத்துடன் தனித்தனியாக ஆழ்ந்த தொடர்பு கொண்ட பிறகு,

நாங்கள் ஒரு வட்டமாக அமர்ந்து அந்த இடத்திற்காகவும் உலகத்திற்காகவும் 'ஓம்' என்று உச்சரித்தோம்.

சற்று மேலே, நாங்கள் "டால்பின் கல்" என்ற இடத்திலும் நின்றோம். அது ஒரு தனித்துவமான "பெண்மை" தன்மையைக் கொண்டிருக்கிறது. தரையிலிருந்து வெளிப்பட்டு வானத்தை நோக்கி 2.5 மீட்டர் உயரத்திற்கு நீண்டு நிற்கும் ஒரு டால்பினின் தலையை அது சித்தரிக்கிறது.

மதியம் மொண்ட்பெலியர் மற்றும் ஃபோரெஸ் கிளை ஸ்தாபனங்களின் அம்பாள் சிலைகளுக்கு மற்றொரு அபிஷேகம் செய்வதற்காக நாங்கள் கூடினோம். இந்த அபிஷேகத்தை பரமேஸ்வரியும் நந்தியும் செய்தனர். பரமேஸ்வரி, அபிஷேகத்திற்காக தன்னுடைய அம்மன் சிலையின் அலங்காரங்களை அகற்றிய போது, அந்தச் சிலையிலும் திருநீறு வந்திருந்ததைக் கவனித்தார்.

அபிஷேகத்திற்குப் பிறகு, மொண்டபெலியர் சிலை கணிசமாக நிறம் மாறியிருந்ததை நாங்கள் அனைவரும் கவனித்தோம். அது, எப்போதும் மிகவும் அடர் நிறத்தில் இருக்கும். மொன்ட்ஸ் டு ஃபோரெஸ் சிலையின் நிறத்திற்கும் அதிர்வுக்கும் தன்னைத் தகவமைத்துக் கொண்டது போலவோ அல்லது அந்தத் தருணத்தில் அவதரித்த தெய்வத்தின் அதிர்வுத் தன்மைக்கு ஏற்ப மாறியது போலவோ இருந்தது, பின்னர், மொன்ட்பெலியருக்குத் திரம்பிய பிறகு அந்தச் சிலை தானாகவே தனது பழைய வெளிர் நிறத்தை மீண்டும் பெற்றது.

அந்த அபிஷேகம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. நாங்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியை உணர்ந்தோம். அதை எங்கள் பாடல்களிலும் பின்னர் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்ட போதும் வெளிப்படுத்தினோம். சுவாமிஜியுடன் எங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது, எங்கள் இதயங்களுக்கு மிகவும் இயல்பான முறையில் மிகுந்த அரவணைப்பையும் ஆற்றலையும் எப்போதும் தருகிறது.

திங்கட்கிழமை முதல்— சிலர் எங்களுடன் தங்கியிருந்த நேரத்தை முடிந்தவரை நீட்டித்திருந்த நிலையில்— பக்தர்கள் படிப்படியாகப் புறப்படத் தொடங்கினர். இதன் காரணமாக, ஒளியின் வெற்றியைக் குறிக்கும் விஜயதசமி நாள் வரை, அடுத்தடுத்த நாட்களில் நாங்கள் ஒரு சிறிய குழுவாகவே இருந்தோம். அந்த நாளில் நீண்ட தயாரிப்புகளுக்குப் பிறகு, நாங்கள் ஒரு மகாபிஷேகத்தை நடத்தினோம். அந்தச் செயல்முறை முழுவதும் பூஜிக்கப்பட்ட 9 கும்பங்களில் இருந்த நீரை அம்பாள் சிலைகள் மீது ஊற்றினோம்.







அது ஒரு சக்தி வாய்ந்த தருணம்; அந்த நீரில் சேமிக்கப்பட்ட ஆற்றல் வெளிப்படும் போது, அதை ஒருவர் நேரடியாக உணர முடியும். பின்னர், இந்த ஆண்டு சிறப்பாக வளர்ந்திருந்த நவதானியங்களை அறுத்து, அவற்றை அம்பாளுக்கு அர்ப்பணித்தப் பின், பக்தர்களுக்கு விநியோகித்தோம்.

இத்தகைய தருணங்களில் வெளிப்படும் அந்த இருப்பின் சக்தியாலும், இதை மற்றவர்களுடன் வாழ்ந்து பகிர்ந்து கொள்வதில் உள்ள ஆழ்ந்த மகிழ்ச்சியாலும் நான் மீண்டும் ஒருமுறை பெரிதும் நெகிழ்ந்து போனேன்.

அம்பாளின் ஆற்றல் நம்மைக் காத்து, நமது இதயங்களையும் மனங்களையும் தெய்வீகத்தை நோக்கி மென்மேலும் திறக்கட்டும். எங்களுக்கு அவர் வழங்கும் அனைத்திற்கும் சுவாமிஜிக்கு எங்கள் நன்றி.

## பக்தர்கள் மற்றும் புதியவர்களின் தன்னார்வ சான்றுகள்…

*“நவராத்திரி எனக்கு ஒரு அற்புதமான அனுபவமாக இருந்தது. அது ஆற்றலும் அழகான சந்திப்புகளும் நிறைந்திருந்தது. ஒருபுறம் அது என்னை ஆழமாகத் தொட்டது, அதேசமயம் நான் சோர்வாகவும் ஆனாலும் அமைதியாகவும் உணர்ந்தேன். இந்தச் சடங்குகளை நாங்க் அனுபவிக்க அனுமதித்ததற்கும், உங்கள் வீட்டையும் உங்கள் இதயத்தையும்ம எங்களுக்காகத் திறந்து விட்டதற்கம் என் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி. இது என்னை ஆழமாகத் தொடுகிறது. மேலும் இந்தத் தருணங்களை இன்னம் விலைமதிப்பற்றதாக ஆக்குகிறது.* *— அக்னஸ்*

*“நவராத்திரியின் போது, ஆழமான மற்றும் முன்னோர்களின் காலத்து ஆன்மிகத்தின் உண்மையான தன்மையுடன் நான் மீண்டும் இணைந்தேன். பிரான்சின் இந்தச் சிறிய மூலையில் ஒளி, அன்பு மற்றும் பகிர்வின் அனுபவங்களை வழங்கும் மாபெரும் இந்தியாவை நான் உணர்ந்தேன். எல்லாம் சாத்தியமாகும் ஓர் இடம். நன்றி”* *— மெலிசாண்டே*

*“இந்த நவராத்திரி கொண்டாட்டத்தின் போது, மொன்ட்ஸ் டு ஃபோரெஸ்ஸில் உள்ள பிரேமானந்தா ஒற்றுமை கிளை ஸ்தாபனம் எட்டு நாட்களுக்கு அதன் அன்பான கதவுகளை எனக்காகத் திறந்தது. நான் எந்த ஆசிரமத்தையும் சாரதாதவள் என்றாலும், நான் மிகுந்த கருணையை உணர்ந்தேன். மேலும் என்னால் முழுமையாக ஒன்றிணைய முடிந்தது. கோவிலுக்கு வெளியே கூட, எல்லா நேரங்களிலும் அம்பாளுடனும் தெய்வீகத் தன்மையுடனும் நான் ஒருமைப்பாட்டை உணர்ந்தேன். நாங்கள் அம்பாளின் வடிவங்களை உருவாக்கிய களிமண் பட்டறைகளின் போதும், காடுகளிலும் பழங்கால புனிதத் தலங்களைச் சுற்றியும் நாங்கள் நடந்த போதும், ஆற்றங்கரையில், தெய்வங்களுக்கு ஒன்பது தேங்காய்களுக்கும் பூமாலைகள் உருவாக்கும்போதும், எங்கள் உணவு வேளைகளின் போதும் — இந்தத் தருணங்கள் அனைத்திலும் நான் பகிர்வு, செழிப்பு, தன்னலமற்ற அன்பு, கவனம், தியானம் மற்றும் கருணை ஆகிய உணர்வுகளை உணர்ந்தேன். மேலும் சுவாமி பிரேமானந்தாவுடனான தங்கள் அனுபவங்களைப் பற்றி பக்தர்கள் கூறுவதைக் கேட்பதை நான் மிகவும் ரசித்தேன். அம்பாளின் 108 நாமங்களை உச்சரித்ததும் எனக்கு உள்ளார்ந்த திருப்தியும் குழுவுடன் ஒரு நல்லிணக்க உணர்வும் ஏற்பட்டது. நான் மிகவும் உறுதியான மனநிலையையும், இந்திய கலாச்சாரத்துடன் ஒரு வலுவான பிணைப்பையும் உணர்ந்தேன்; நான் மிகுந்த அன்பைப் பெற்றேன். மேலும், இந்த ஆன்மாக்களின் குடும்பத்தில் என் வீட்டில் இருப்பது போல் உணர்ந்தேன். இன்று நான் கற்றுக் கொண்ட சில மந்திரங்களை உச்சரித்து வருகிறேன். மேலும், பௌர்ணமி நாட்களில், எனக்குக் கொடுக்கப்பட்ட காளி சிலைக்கு வழிபாடுகள் செய்து, பாடல்களைப் பாடி, காணிக்கைகளைச் செலுத்தத் தொடங்கியுள்ளேன். பிரேமானந்தா ஒற்றுமைய கிளை ஸ்தாபனத்திற்கும், சுவாமிஜிக்கும், சிவானிக்கும் நவராத்திரியின் போது நான் சந்தித்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.”* *— மெலோடி*






## குறிப்புகள்:

1) இங்கு எங்களிடம் மூன்று சிலைகள் உள்ளன. அவற்றை நாங்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக வழிபட்டு வருகிறோம் – ஒன்று ஆசிரமத்திலிருந்து வந்த ஒரு சிறிய கருமாரியம்மன் சிலை; மற்றொன்று எனது தாயாருக்காக சுவாமிஜியால் ஆசிர்வதிக்கப்பட்ட மற்றொரு கருமாரியம்மன் சிலை; மூன்றாவது இந்த கிளை ஸ்தாபனத்தின் சிலை.

2) இந்தக் கிளை ஸ்தாபனத்தில் உள்ள சிலை, புனித வடிவியல் முறைப்படி பெருங்கற்கள் மற்றும் கருப்பு தெய்வச் சிலைகள் நிறைந்த இந்தப் பிராந்தியத்தின் எரிமலை மண்ணுடன் தொடர்புடையது என்று நான் தனிப்பட்ட முறையில எப்போதும் உணர்ந்துள்ளேன். இதுவே அந்தச் சிலையின் அடர் கருப்பு நிறத்திற்கும், கருப்பு தெய்வவச் சிலைகளைப் போன்ற அதன் தனித்துவமான சக்திக்கும் காரணம் என்று நான் நம்புகிறேன்.

## ஆர்ஜெண்டினாவின் லாஸ் ரோசாஸில் உள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனத்தின் ஒருங்கிணைப்பாளரான கனகவல்லி அவர்களின் மறைவுக்கு நாங்கள் இரங்கல் தெரிவிக்கிறோம்



கனகவல்லி அவர்கள் அக்டோபர் 27ம் தேதியன்று ஆர்ஜெண்டினாவிலுள்ள லாஸ் ரோசஸில் அமைதியான முறையில் காலமானார். அவர் ஒரு அற்புதமான பெண்மணி. தனது கணவர் பரசுராமனுடன் இணைந்து, சுவாமிஜியின் கிளை ஸ்தாபனத்தின் அர்ப்பணிப்பு மிக்க ஒருங்கிணைப்பாளராக 20 ஆண்டுகள் பணியாற்றினார்.

ஆர்ஜெண்டினாவின் டிராஸ்லாசியேரா மலைகளின் அழகிய பகுதியில் அமைந்துள்ள தங்கள் உணவு விடுதி மற்றும் வீட்டில், பிரேம தியான வாரங்கள் எனப்படும் நீண்ட கால ஆன்மிக நிகழ்ச்சியை அவர்கள் தவறாமல் ஏற்பாடு செய்து வந்தனர்.

அவரது அன்பான நினைவாக, அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டி, ஆசிரமத்திலுள்ள கோவிலில் நாங்கள் ஒன்று கூடி "ஓம் நமசிவாய" மந்திரத்தை உச்சரித்தோம்.

கனகவல்லி ஒரு சிறந்த பக்தை மற்றும் அயராது அனைவரையும கவனித்துக் கொண்ட ஒரு சுறுசுறுப்பான ஒருங்கிணைப்பாளர். அவரது அர்ப்பணிப்புள்ள பணி, அவரது அழகான குணம், அவரது தன்னலமற்ற தன்மை, மற்றும் சுவாமிஜியின் மீதான அவரது ஆழ்ந்த அன்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றுக்காக நாங்கள் அவரை எப்போதும் நினைவில் கொள்வோம். அவரது ஆன்மா சாந்தியடைய நாங்கள் பிரார்த்திக்கிறோம். மேலும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## இளைஞர் சங்கச் செய்திகள்...

Premananda International Youth

## ஸ்கந்த சஷ்டி, பிரேமானந்தா இளைஞர் குழு, இந்தியா



ஸ்கந்த சஷ்டி என்பது முருகப் பெருமானையும், அவர் சூரபத்மன் என்ற அசுரனை வென்றதையும் கொண்டாடும் ஆறு நாள் திருவிழாவாகும். இது தீமையின் மீது நன்மையின் வெற்றியைக் குறிக்கிறது. இந்தத் திருவிழாவில் ஆறு நாட்கள் விரதம் இருத்தல், தினசரி வழிபாடு செய்தல் ஆகியவை அடங்கும். இது பிரார்த்தனை மற்றும் கொண்டாட்டங்கள் நிறைந்த ஒரு நாளுடன் நிறைவடைகிறது. மேலும் பக்தர்கள் கோவில்களுக்குச் சென்று வழிபடுகின்றனர்.

இங்கு ஆசிரமத்தில், நாங்கள் அக்டோபர் 22 முதல் 27 வரை, முருகப் பெருமானுக்கு மிகுந்த பக்தியுடன் அபிஷேகங்கள் செய்து ஸ்கந்த சஷ்டியைக் கொண்டாடினோம்!

இலங்கையின் பிரேமானந்தா இளைஞர் குழுவினர், அருள் நிறைந்த அபிஷேகங்களை முருகப் பெருமானுக்குச் செய்து ஸ்கந்த சஷ்டியை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். அனைவரும் முருகப் பெருமானின் திருவுருவச் சிலையைத் தங்கள் கைகளில் ஏந்தி அவரது அருளைப் பெற்றனர்.











மேல் இடதுபுறத்திலிருந்து கடிகாரச் சுற்றில்:
முருகன் சிலைக்கு அபிஷேகம், பக்தரகள் மந்திரம் உச்சரித்தல், அபிஷேகத்திற்குப் பிறகு அழகாக அலங்கரிக்கப்பட்ட முருகன் சிலை முருகன் சிலையுடன் ஆசி பெறுதல்.

